[1973 பிப்ரவரி 28

நீடாமங்கலம் ரயில் நிலையத்தருகில் மேம்பாலம்.

186 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீடாமங்கலத்தில் ரயில்வே நிலையத்துக்கருகில் மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நீடாமங்கலம் இரயில்வே நிலையத்திற்கு அருகில் கட்டப்படும் மேம்பாலத்திற்கான மதிப்பீட்டுத் தொகையையும், அந்தப் பணி எப்பொழுது துவங்கப்பட இருக்கிறது என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் சொன்னது செயற்குறிப்பு பரிசிலனையில் இருக்கிறது என்பது. மத்திய அரசுக்கு இதுபற்றி அறிக்கை அனுப்பியிருக்கிறோம். அதற்குப் பிறகு முடிவு செய்யப்படும்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நீடாமங்கலத்திலே தற்போது ஏற்பட இருக்கும் அந்த இடம் அந்த ஊரின் ஒரு சிறிய கடைத் தெரு பாழாக்கப்படும் நிலையில், அந்த ஊரின் சிறப்பே குறைகின்ற நிலையில் இருப்பதால், அதற்கு ஊராட்சி மன்றத்தின் சார்பில் கொடுக்கப்படும் மாற்றுத் திட்டம் ஏற்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தை அந்தத் திட்டம் நிறைவேற்றப் படும்பொழுது பரிசிலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

Price of Sugar Cane

"187 *Q.*—THIRU N.K. PALANISWAMY :

THIRU *N.* KITTPPA : **Will the Hon.** the Minister for Agriculture be pleased to state whether the Government have represented to the Centre to increase the price of the sugarcane supplied to the Sugar factories in the State?

1973 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இல்லை. ஆனால் விவசாய விலை நிர்ணயக் குழுவிடம் தொடர்பு கொள்ளப்பட்டு அதிக விலைபற்றிப் பேசப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிச்சாமி: சார், மற்ற மாநிலங்களிலே 110 ரூபாயிலிருந்து 120 ரூபாய் வரையிலே கிடைக்கும் நிலையில் நம்முடைய சர்க்கார் இங்கு மட்டும் என் கரும்பிற்குக் குறைவாக விலையை நிர்ணயம் செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, மத்திய அரசு குறைந்த பட்ச விலை 9.4 சதவிகிதம் உற்பத்தித் திறனுக்கும் அதற்குக் குறைவாக இருப்பவைகளுக்கு 1971–72 ஆம் ஆண்டில் 73.70 ரூபாய் கொடுப்பது என்றும், 1972–73 ஆம் ஆண்டில் 8.5 சதவிகிதம் உற்பத்தித் திறனுக்கும் அதற்குக் குறைவாக இருப்பவைகளுக்கும் 80 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்துள்ளது. ஆனால், இந்த அரசு ஆலை முதலாளிகளையும், உற்பத்தியாளர்களையும் கூட்டிப் பேசி, எவ்வளவு திறன் குறைவாக இருந்தாலும் 1971–72 பருவத்திற்குக் குறைந்த விலை 85 ரூபாய் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு புள்ளிக்கும் 6.6 காசு கொடுக்க வேண்டுமென்று விலை நிர்ணயம் செய்யப்பட்டு சில ஆலைகளில் 100 ரூபாய் கொடுக்கிறார்கள், சில ஆலைகளில் 95 ரூபாய் கொடுக்கிறார்கள். சில ஆலைகளில் 90 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் எவ்வளவு குறைந்தாலும் 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே அதிகமாக விலை கொடுக்கப் படுகிறது அந்த உற்பத்தியாளர்களுக்கு என்ற ஒரு கருத்து இருக்கிறதே. ஆகவே, இப்பொழுது 85 ரூபாய் என்று கொடுப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, இதை உயர்த்துவதற்கு இந்த அரசாங்கம் மத்திய அரசுக்குப் பரிந்துரை வழங்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, மகாராஷ்டிரத்தில் 10-இலிருந்து 11 சதவிகிதம் வரையில் உற்பத்தித் திறன் இருக்கிறது. அதனால் விலை கூடுதலாக வருகிறது. இங்கேயும் இந்த அரசு, அதிக விலை கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மட்டுமல்ல. விவசாயக் கமிஷனுக்கு இப்பொழுது எழுதியிருக்கிறது. இங்கேயும் அதிகம் ரூபாய் கொடுக்க வேண்டு மென்று எழுதி இருக்கிறது.

[1973 பிப்ரவரி 28

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, சர்க்கரை உற்பத்தியிலே 30 சதவிகிதத்தை ஆலைக்காரர்கள் நேரடியாகத் தருகிறார்கள். 360 ரூபாய், 370 ரூபாய்க்கு ஒரு குவிண்டால் மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. ஆனால் அரசாங்கம் நிர்ணயம் செய்திருப்பதுபோல் அல்லாமல், எங்கள் நெல்லிக்குப்பம் ஆலையில் 80 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது, 85 ரூபாய் அல்ல. நியாய மாகப் பார்த்தால், இப்பொழுது சர்க்கரை விற்கிற விலையை வைத்து 100 ரூபாய் கொடுக்கலாம். ஆகவே, ஆலை அதிபர்களையும், கரும்பு விவசாயிகளின் பிரதிநிதிகளையும் அழைத்து இந்த விலையை நிர்ணயம் செய்வதற்கு வழி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதன் விலையை நிர்ணயிக்கிற பொறுப்பு, அதிகாரம் மத்திய அரசிடத்தில் இருக்கிறது. நாம் அதைப் பற்றிப் பலமுறை விவாதித்துப் பேசியிருக்கிறோம். அவர்கள் கொடுத்திருப்பது 73.70 திறன் உள்ளவைகளுக்கு 80 ரூபாய் கொடுக்க வேண்டும், அதற்குமேல் உள்ளவைகளுக்கு ஒரு புள்ளிக்கு 6.6 காசு கொடுக்க வேண்டு மென்று அளவை நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த அரசின் சார்பில் இன்னும் அதிகமாக அந்த விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். நெல்லிக்குப்பம் ஆலையில் 80 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எல்லோரும் குறைந்தபட்சம் 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். அவ்வாறு கொடுக்கப்படவில்லை என்பதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக ஆவன செய்யப்படும்.

திரு. கோவை. செழியன் : தமிழ்நாட்டில் கரும்பினுடைய ரெகவரி 9-ல் இருந்து 10 பர்சன்ட் இருக்கிறது. வெல்லமாக ஆட்டினால் ஒரு டன்னுக்கு செலவு போக 150 ரூபாய் கிடைக்கிறது. மில்லுக்கு அக்ரிமென்ட் போட்டுவிட்ட காரணத்தால் வெல்லமாக ஆட்ட முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு கேரளாவில், பொள்ளாச்சிக்குப் பக்கத்தில் இருக்கும் சித்தூர் மில்லில் டன்னுக்கு 115 ரூபாய் தருகிறார்கள். அதே போல் சக்தி ஆலையிலும் அதிகம் தருகிறார்கள். கூட்டுறவு முறையில் உள்ள மில்களில் மட்டுந்தான் குறைந்த விலை

1973 பிப்ரவரி 28]

தருகிறார்கள். இதற்கு மத்திய அரசாங்கத்தின் உத்தரவை எதிர் பாராமல் மாநில அரசாங்கமே உத்தரவு போட வேண்டும். மத்திய அரசாங்கத்தின் உத்தரவைப் பற்றிக் கவலைப்படாமல் நாமே இதைப்பற்றி உத்தரவு போட தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு ஆலைகளில் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்ற தவறான தகவலைக் தருகிறார். இதிலுள்ள சிக்கல் என்னவென்றால் ரெகவரிக்கு ஏற்றாற்போல் ஒரு விலையை மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கிறது. அப்படி ஒரு விலையை நிர்ணயித்துவிட்டு அதைவிட கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அகில இந்திய ரீதியில் ரெகவரிக்கு ஏற்றாற்போல் கொடுக்க வேண்டுமென்று ஒரு விலையை நிர்ணயித்துவிட்டு அதற்கு மேல் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது பொருத்தமற்றது என்று நம்முடைய அரசாங்கம் முடிவு செய்து அகில இந்திய அளவில் நிர்ணயித்திருப்பதை யொட்டி கணக்குப் போட்டு 85 ரூபாய்க்குக் குறைவாக வந்தாலும் 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக் கிறோம். கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்தமட்டில் 100 ரூபாய் கொடுத்த ஆலைகளும் உண்டு. இந்த ஆண்டுகூட முன்கூட்டியே 100 ரூபாய் கொடுப்போம் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ரெகவரிக்கு ஏற்றாற்போல் கூட்டுறவுத் துறையும் பணம் கொடுக்கிறது. தனியாரும் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தர்மபுரி கூட்டுறவுச் சங்கத்தில் 65 ரூபாய் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாதிரி தவறுகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்யாமல் இருக்க அரசாங்கம் நட வடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தருமபுரி கூட்டுறவு ஆலை இப்போது புதிதாகத் தொடங்கப்பட்ட ஆலையாகும். இன்னொன் றையும் சிந்திக்க வேண்டும். கரும்பு கொடுக்கின்றவர்களே அதில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கரும்பாகக் கொடுக்கும்போது விலை குறைவாக இருந்தாலும்கூட லாபத்தில் அவர்களுக்குப் பங்கு கிடைக்கிறது. இந்த ஆண்டு அதைவிட கூட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : மராட்டியம் போன்ற மாநிலங்களில் அதிக ரெகவரியும், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் குறைவான ரெகவரியும் வந்தாலும்கூட

டன்னுக்கு 100 ரூபாய்க்கும் அதிகமாகக் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் சொன்னது போல் கூட்டுறவுத் துறையில் சில மில்களில் 90 ரூபாய் கொடுக்கிறார்கள். அதிக லாபம் தரும் கூட்டுறவு ஆலைகளில் 100 ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படித்தான் இப்போது கூட்டுறவு ஆலைகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் முன்னாலே குறிப்பிட்டது போல் அகில இந்திய அளவில் எடுக்கப் படுகின்ற பொருளாதாரக் கொள்கையின் முடிவு நமக்கு இப்படிப் பட்ட சங்கடங்களை உண்டாக்குகிறது. நம்மைப் பொறுத்த வரையில் சர்க்கரை விலையையும், கரும்பின் விலையையும் நிர்ணயிக் கின்ற பொறுப்பை நமக்கே கொடுத்துவிட்டால், நாம் நம்முடைய உற்பத்திக்கேற்றவாறு, லாபத்திற்கேற்றவாறு கரும்பிற்கும் விலை கொடுக்க முடியும், சர்க்கரையையும் நியாயமான விலைக்கு தமிழ் நாட்டு மக்களுக்குக் கொடுக்கவும் வழி ஏற்படும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் வாதம்.

Thiru R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether this proportion has been fixed in consultation with the Central Government or this Government did it on its own accord?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதை மத்திய அரசாங்கந் தான் முடிவு செய்கிறது. நம்மை எல்லாம் அழைத்துப் பேசுகிறார் கள். நம்முடைய தரப்பில் இந்தக் கருத்து எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. நம்முடைய பகுதியில் செலவு குறைந்திருக்கு மானால், அதற்கேற்றாற்போல் விலையை நிர்ணயிக்க வேண்டும். காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன், செலவிற்கு ஏற்றாற்போல் விலையை நிர்ணயிக்கவேண்டும். இந்தக் குழப்பம் மாநிலத்திற்கு மாநிலம் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் நாமே முடிவு செய்ய லாம் என்ற பொதுவான கொள்கையை ஏற்றுக் கொண்டால் பிரச்சினை தீரும். விலையைப் பொறுத்தவரை எங்களிடத்தில் விட்டுவிடுங்கள் என்று சொல்லி வருகிறோம்.

திரு. ஏ. எம். இராஜா : சர்க்கரை ஆலைகளில் கரும்பு செலவு அடிப்படையில் விலை நிர்ணயிக்கிறார்கள். ஆலைக்காரர்கள் கூறும் செலவு உண்மையான செலவுதானா என்பதை 'செக்' பண்ண அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா?

1973 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்காக ஒரு முறை வகுக்கப்பட்டது. அதற்காக ஒரு இயந்திரம் வைத்து கண்டு பிடிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. அப்படிச் செய்தால் கரும்பு உற்பத்தியாளர் சில பேருக்கு அதிகமாகவும், சில பேருக்குக் குறைவாகவும் போய்விடும் என்ற காரணத்தால் அந்த முறை மேற்கொள்ளப்படவில்லை. பொதுவாக கூட்டுறவு ஆலைகளில் தவறு ஏற்படாமல் கண்காணிக்கப்படுகிறது. அதை முன் மாதிரியாக வைத்து மற்ற ஆலைகளிலும் தவறு செய்தால் கண்டு பிடிக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : ரேகவரி அடிப்படையில் விலை நிர்ணயம் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கேரளாவில் இருக்கக்கூடிய சித்தூர் கரும்பு பாக்டரிக்கும், பொள்ளாச்சியில் இருக்கும் கரும்பு பாக்டரிக்கும் ஒரே ஏரியாவில் இருந்து கரும்பு வாங்குகிறார்கள். அப்படியிருந்தும் சித்தூர் பாக்டரியில் 115 ரூபாய் கொடுக்கிறார்கள் ; பொள்ளாச்சியிலிருக்கும் பாக்டரியில் 100 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இப்படி விலை வித்தியாசமாகக் கொடுக்க என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சித்தூரிலுள்ள ஆலை ஒரு தனிப் பிரச்சினை. அந்த ஆலைக்கு நம்முடைய மாநிலத்தின் ஒரு பகுதியிலிருந்து கரும்பு கொடுக்க வேண்டுமென்ற ஒப்பந்தம் இருக்கிறது. அந்த ஆலைக்கு அதிகமாகக் கரும்பு கிடைக்காத காரணத்தால், அதிக விலை கொடுத்து கரும்பை வாங்க முயற்சி எடுத்துக் கொள்ளுகிறார்கள். அந்த ஆலை நம்முடைய மாநிலத்தில் இல்லை, அதை நாம் கட்டுப்படுத்த முடியாது. கேரள அரசுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நம்முடைய பகுதியில் இருந்து இத்தனை ஏக்கரில் கரும்பு எடுத்துக் கொள்ளலாம் என்ற ஒப்பந்தம் இருக்கிறது. ஆகவே, அதற்கும் நம்முடைய மாநிலத்திற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேட்பவர்கள் சுருக்கமாகவும், நேரடியாகவும் கேள்வி கேளுங்கள். திருமதி அனந்தநாயகி . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : அகில இந்திய அடிப்படையில் கரும்புக்கு விலை நிர்ணயிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் குறைந்த விலைதான் நிர்ணயிக்கிறார்கள்,

அதற்கு மேல் மாநில அரசாங்கங்கள் அதிகமாகக் கொடுக்க முன் வரலாம் என்று கூறுகிறார்கள் என்றார்கள். அந்த முறையில் இந்த அரசாங்கம் ஏன் அதிகமாகக் கொடுக்க முன்வரக் கூடாது? ஒரு மில்லில் 90 ரூபாய், சக்தி மில்லில் 112 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். அதற்குப் பதிலாக எல்லா மில்களிலும் எல்லோருக்கும் 100 ரூபாய் என்று கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மினிமம் ப்ரைஸ் என்று வைத்துக் கொண்டு மாக்சிமம் பிரைஸ் கொடுங்கள் என்று சொல்லித் தப்பித்துக் கொள்வது அவர்கள் வாடிக்கை. நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். ரெகவரிக்குத் தகுந்தவாறு விலையை நிர்ணயித்துவிட்டு விலையைக் கூட்டிக்கொடுங்கள் என்று சொல்வது அரசியல் விளையாட்டே தவிர உண்மையானதல்ல.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். பாலிசி பற்றி எல்லாம் இப்போது பேச வேண்டாம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் ஏற்கனவே சொன்னேன். 73.70 திறனுள்ளவைகளுக்கு 80 ரூபாய் தான் கொடுக்க வேண்டும். அதைவிடக் குறைவாக 65 திறனுள்ளவைகளுக்குக் கூட 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நாம் உத்தரவு போட்டிருக்கிறோம்.

திரு. எஸ். நல்லசாமி: கரும்புக்கு ரெகவரி அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. பல விவசாயிகள் உரத்தை அதிகமாகப் போட்டு 50 டன், 60 டன், 70 டன் உற்பத்தி கிடைக்க வேண்டுமென்று கருதி ரெகவரி குறைவாக உற்பத்தி செய்து விடுகிறார்கள். விவசாயிகள் அதிக ரெகவரி தரக்கூடிய 449 என்ற உயர்ந்த ரக கரும்பை உற்பத்தி செய்ய வேண்டுமென்று கூறி அந்த ரெகவரி அடிப்படையிலே விலையைக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ரெக்கவரி அடிப்படையில்தான் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் கொடுக்க முடியும்.

1973 பிப்ரவரி 28]

திரு. க. நாகராஜன் : சர்க்கரை ஆலைகளிலிருந்து வசூலிக்கப் படும் டெவலப்மெண்ட் செஸ் நிதியிலிருந்து இந்த விலைக் குறைவை சரிக்கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஷுகர் கேன் செஸ் வசூலிக்கப்படுவது கரும்பு ஆராய்ச்சி, கரும்பு உற்பத்திக்கு உதவி செய்தல், அதேபோல் சாலைகள் அமைத்தல் இப்படிப்பட்ட வேலை களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. அது அவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : கரும்பிலிருந்து எவ்வளவு ரெக்கவரி கிடைக்கிறது என்பதைப் பற்றி முடிவு செய்யும் அதிகாரி கரும் பாலைகளிலிருந்து சம்பளம் வாங்கும் அதிகாரியாக இருப்பதால், விவசாயிகளுக்குச் சாதகமான முறையில் கணக்கெடுக்கப்பட வில்லை என்ற கருத்து விவசாயிகளிடையே இருப்பதால், அதற்கு வேறு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்கப்பட்டது. குறைந்தபட்சம் ரூ. 85 கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தர விட்டும்கூட இன்னும் சில ஆலைகளில் ரூ. 75 தான் கொடுக்கப்பட்டு வருகிறது என்றால் எப்படி அந்த ஆலை முதலாளிகளை அதற்கு அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள்? விவசாயிகள் பாதிக்கப்படும் ஒரு நிலை அதனால் ஏற்படுகிறது. எனவே அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் எல்லாம் ரூ. 85 வீதம் கொடுக்க வேண்டு மென்று சொல்லிக் கொடுத்துவிட்டார்கள். ஒரே ஒரு ஆலைதான் ரூ. 80 கொடுத்தார்கள். மிச்சமுள்ள ரூ. 5யையும் கொடுக்க வேண்டுமென்று அரசு தலையிட்டுச் சொல்லி அவர்கள் அந்த ஐந்து ரூபாயையும் கொடுக்க ஒப்புக்கொண்டபின்தான் கரும்பு கொடுத் துக்கொண்டு வருகிறார்கள். எந்த ஆலையும் ரூ. 85க்குக் கீழ் கொடுப்பதில்லை. ரூ. 80 கொடுக்கிற ஆலை இருந்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்த ஆலை அதிபர்களைக் கலந்து பேச நாங்கள் தயாராக இருக்கிறோம். பேசி ரூ. 85 வாங்கிக் கொடுப்போம்.

[1973 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ரூ. 85 கொடுக்காத ஒரு ஆலை சம்பந்தமாக கூப்பிட்டுப் பேசி கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். அப்படி ரூ. 80 கொடுப்பவர்களாக இருந்தால், அதைத் தெரிவித்தால், உடனடியாக அதுபற்றி இன்றையதினமே தக்க நடவடிக்கை எடுக்கத் தயாராகயிருக்கிறோம்.

DR. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister whether the price fixation is done on the recovery basis alone and whether the Central Government have instructed the State Government to subsidise the price so as to have a uniform price or they have instructed industrialists to sell it at the price fixed by the Central Government?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 73.70-க்கு கீழ் குறைவானவற்றிற்கு குறைந்தபட்ச விலை கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டபோது கூட அவர்களைக் கலந்து பேசச் சொல்லியிருக்கிறார்கள். கலந்து பேசி முடிவு எடுக்கப்பட்டது தான் ரூ. 85. 80-க்கு மேல் ஒத்துக் கொள்ளமாட்டோம் என்று சொல்லிய பின் 85 கொடுக்க ஒத்துக் கொள்ளப்பட்டது. 6.6 காசு அதிகமாக ரெக்கவரி அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைன்று மத்திய அரசுக்கு எழுதினோம், பொதுவாக, இன்னும் சிறிது விலையை அதிகமாக உயர்த்தி குறைந்தபட்ச விலை நிர்ணயிங்கள் என்று. இதுவரையில் பதில் இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கரும்பு விலை சம்பந்தமாகப் பார்க்க ஷுகர் டயரக்டர் என்று ஒருவர் இருக்கிறார். நவம்பரிலிருந்து கரும்பாலைகள் ஓடுகின்றன. அதிலிருந்து நான்கு மாதங்கள் பில்கள் செட்டில் செய்யப்படாமல் இப்போது ரூ. 80 என்று கொடுக்கிறார்கள். இதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து சொல்ல வேண்டியது ஷுகர் டயரக்டர் கடமை. நாங்கள் இங்கு மன்றத்தில் எடுத்துச் சொல்கிறோம். சில ஆலைகளில் இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதித்திருக்கிறார்கள். ரூ. 300, ரூ. 350 என்று விலைக்கு விற்று, அதுவும் 30 சதவிகிதம் சர்க்கரையில் இருந்து சம்பாதித்திருக்கிறார்கள். ஆகவே நான் சொல்வது, விவசாயிகளுக்கு அவர்களுக்குள்ள

1973 பிப்ரவரி 28]

நியாயமான பங்கைத் தர வேண்டும். அதற்காக என்ன நடவடிக்கைகளை அரசாங்கத்திலிருந்து எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : லாப நஷ்டக் கணக்கிற்கு வரவில்லை. குறிப்பிடப்பட்டிருப்பதைவிடக் குறைவான விலை கொடுப்பதாக இருந்தால் அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே இல்லை, என் கவனத்திற்கேகூடக் கொண்டு வந்திருப்பார்களேயானால், நிச்சயமாக இதற்குள் அந்த ரூ. 85 வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் அதைப்பற்றி இது வரையில் கொண்டுவரவில்லை, இப்போது கொண்டுவந்திருக்கிறார்கள். உடனடியாக அதுபற்றி இன்றேகூட பேசி முடிவு எடுக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : செக்கவரி அடிப்படையில்தான் விலை நிர்ணயிக்கிறோம் என்றாலும்கூட வட மாநிலங்களில் பீஹார், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் செக்கவரி குறைவாக இருந்தும்கூட அதிகமான விலை நிர்ணயிக்கிறார்கள். மத்திய அரசு வட மாநிலங்களுக்கு ஒரு அடிப்படையிலும் தென் மாநிலங்களுக்கு ஒரு அடிப்படையிலும் நிர்ணயிப்பதைப் போக்க நம் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுபோல் விலை நிர்ணயிப்பதில் இப்படிப்பட்ட தாரதம்மியம் இருப்பதாகத் தகவல் இல்லை. அவர்களுக்கு அப்படி ஏதாவது தகவல் தெரியுமேயானால், அதை அறிவிப்பார்களேயானால், நாம் உறுதியாகக் கேட்க உதவிகரமாகயிருக்கும்.

திரு. என். கே. பழனிச்சாமி : கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் மேட்டூர் அலுமினியம் பாக்டரியை எடுத்துக்கொண்டமாதிரி இந்தச் சர்க்கரை ஆலைகளையும் ஏன் சர்க்காரே எடுத்துக் கொள்ளக்கூடாது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது கொள்கைப் பிரச்சினை.

திரு. எம். சுரேந்திரன் : தொழில் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது மத்திய அரசு குறைந்தபட்ச விலை நிர்ணயித்து அதிக விலை கொடுங்கள் என்று சொல்வது அரசியல் என்று கூறி

னார்கள். இந்தச்சபையே அரசியல்தானே. ஆகவே அதற்கு என் குறைந்தபட்சம் என்று சொல்லியிருந்தாலும் கூடுதல் கொடுக்கக் கூடாது? அப்படித்தானே மற்றபடி கொடுத்துக் கொண்டு வருகிறீர்கள். குறிப்பிட்ட அளவிற்கு அதிகம் கொடுத்துக் கொண்டு வரவில்லையா? கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுப்பதில் பல இடங்களில் பல்வேறு முறையில் கொடுக்கப்பட்டு வருகின்றன. சர்க்கரை உற்பத்தியாளர்கள் கொள்ளை அடிக்கிறார்கள் என்பது நன்கு தெரிந்த உண்மை. ஆகவே இதில் ஆட்சி செய்கிற கட்சி தான் அரசியலைக் கலக்கிறதே தவிர, மற்றவர்கள் அல்ல என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உறுப்பினர் அவர்கள் இந்த அரசாங்கத்தைத் தாக்குவதற்காக நம் மாநிலத்தின் நன்மைகளைப் புறக்கணிப்பது சரியல்ல. ஏற்கனவே நான் விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். மற்ற மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளின் நன்மைகளையும் நம் மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் நன்மைகளையும் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஒரு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்றபடி சர்க்கரை விலையும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இரண்டையும் மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் நிலையில், இங்கு கூடுதல் வாங்கிக்கொடு என்று சொல்வது அப்பட்டமான அரசியல்தான். இதனால் மீதி விலையை நம் சர்க்கார் கொடுக்க வேண்டும். தனியார் ஆலைகள் சம்பாதிக்க இந்தச் சர்க்கார் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று வாதாடுவது முற்றிலும் பொருத்தமற்ற வாதம். இதற்கு ஒரே ஒரு பரிகாரம், மாநில அரசிடம் கரும்பு விலையை, சர்க்கரை விலையை நிர்ணயிக்கிற அதிகாரத்தைக் கொடுங்கள். நாங்கள் அதிகபட்சம் ரூ. 85 அல்லது ரூ. 100க்கு மேலாக, மற்ற மாநிலங்களில் கொடுப்பதைவிட அதிகமான விலை உற்பத்தியாளர்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம். அதற்கான அதிகாரத்தை மட்டும் எங்களுக்குத் தரவேண்டும் என்பது எங்கள் வாதம். மத்திய அரசின் வாதம் நாங்கள்தான் நிர்ணயிப்போம் என்பது. லாப வேட்டைக்காரர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதற்கு எங்கள் கொள்கை, எங்கள் அரசியல், எங்கள் பொருளாதார தத்துவம் அதற்குக் கொஞ்சம் கூட இடம் கொடுக்காது.